வாக்குமூலம்

சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்

**OS.No. 299/2023**

வழக்கு சாட்சி **PW 1**

1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருகே.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராக்கியண்ணன் | தொழில் | : விவசாயம் |
| தந்தை பெயர் | : சின்னாகவுண்டர் | கணவர் பெயர் | : --- |
| கிராமம் | : அரசபிள்ளைபட்டி | வயது | : சுமார் 65 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 17.07.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:

அரசபிள்ளை பட்டி கிராமம் சர்வே எண்.145 என்ற சர்வே எண் தொடர்பாக தான் வழக்கு என்றால் ? சர்வே எண்.145/1 தொடர்பான வழக்கு ஆகும். கடந்த 16.09.1948ம் தேதி எனது தகப்பனார் பாகப்பிரிவினை ஏற்படுத்திக் கொண்டார்கள் என்றால் ? ஆமாம். சர்வே எண்.145ல் கிழபுறம் ஒரு ஓடையும், சர்வே எண்.145ன் மத்தியில் ஒரு ஓடையும், சர்வே எண்.145ன் மேற்கில் ஒரு ஓடையும் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி செல்கிறது என்றால் ? இரண்டு ஓடைகள் தான் செல்கிறது. சர்வே எண்.145 புலத்தில் கிழக்கில் ஒரு ஓடையும் மத்தியில் ஒரு ஓடையும் செல்கிறது. சர்வே எண்.145ன் மேற்கில் ஓடை செல்வதில்லை. மலைப்பாதை செல்கிறது. ஏற்கனவே ஓடையாக தான் இருந்தது என்றால் ? சரியல்ல.

பாதையை ஒட்டி மேல்புறமாக தான் ஓடை செல்கிறது. சாட்சி மீண்டும் ஓடையாக செல்லவில்லை என்றும் வனத்துறை தண்ணீர் செல்வதற்காக வாய்க்கால் போல் உள்ளது என்றும் பதில் அளித்தார். எனது சொத்திற்கு மேல்புறம் ஒரு மலைப்பாதையும், கிழபுறம் ஓடையும் வருகிறது என்றால் ? ஓடைக்கு கிழக்கேயும் சொத்து உள்ளது. நான் தற்போது அனுபவித்து வரக்கூடிய சொத்து சர்வே எண்.145-ல் கிழபுறம் உள்ள ஓடைக்கு மேற்குள்ள சொத்தை தான் அனுபவித்து வருகிறேன் என்றால் ? சரியல்ல. கிழபுறம் உள்ள சொத்தையும் அனுபவித்து வருகிறேன். தாவா வழக்குரை சங்கதிகள் நான் சொன்னதன் அடிப்படையில் தான் தயார் செய்யப்பட்டது என்றால் ? ஆமாம். சர்வே எண்.145/1பி என்ற நிலமானது பிரதிவாதியின் வசம் உள்ளதாகவும், பாகப்பிரிவினை வேண்டும் என்று தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? சரியல்ல. சொத்து எனது அனுபவத்தில் தான் உள்ளது. பாகப்பிரிவினை வேண்டும் என்று தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்.145/1பி என்ற புலத்திற்கு யாருடைய பெயரில் பட்டா உள்ளது என்றால் ? ஆறுமுகம், ராசு ஆகியோர்கள் பெயரில் பட்டா உள்ளது. கடந்த 1948ம் ஆண்டு ஏற்படுத்திக் கொண்ட

பாகப்பிரிவினையில் சர்வே எண்.145 என்ற புலத்தில் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் ? ஏக்கர் 7.70 செண்ட் பூமி உள்ளது. யார் யாருக்கு ஏக்கர் 3.50 செண்ட் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் ? கருப்பணகவுண்டர் மற்றும் சின்னாகவுண்டர் ஆகியோர்களுக்கு பூமி ஒதுக்கப்பட்டுள்ளது.

சர்வே எண்.145/1 புலத்தை பொறுத்து கடந்த 1948, 1961, 1968, 1984, 1994 ஆகிய ஐந்து பாகப்பிரிவினைகள் ஏற்பட்டுள்ளது என்றால் ? சரியல்ல. எங்கள் குடும்பத்திற்குள் 1994-ம் ஆண்டு தான் ஏற்பட்டது. மற்ற குடும்பத்திற்குள் ஏற்பட்டதை பொறுத்து எனக்கு தெரியாது. சர்வே எண்.145/1 என்ற புலத்தில் இந்த பிரதிவாதிக்கு 2 ஏக்கர் 35 செண்ட் பாத்தியம் என்றாலும், மற்றொரு பங்காளிக்கு ஏக்கர் 1.15 செண்ட் பாத்தியம் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியவில்லை. பிரதிவாதியின் குடும்பத்திற்குள் ஏற்பட்ட ஆவணங்களில் அவ்வாறு தான் உள்ளது என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களை எப்போதாவது சர்வேயர் வழியாக அளவீடு செய்து பார்த்துள்ளேனா என்றால் ? இல்லை.

நான் சொத்துக்களை அளவீடுகள் செய்து பார்க்காத நிலையில் விஸ்தீரணம் 0.59 செண்ட் நிலம் பிரதிவாதி வசம் உள்ளதாக எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால் ? நானும் எனது சகோதரரும் அளந்து எங்களது சொத்துக்களை பாகம் செய்த போது தெரிந்து கொண்டோம். நானும் எனது சகோதரரும் பாகம் பிரித்து கொண்டது 1994 என்றால் ? சரிதான். சர்வே எண்.145/1எ என்ற புலத்தில் ஏக்கர் 2.91 செண்ட் தான் எங்களது பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் ? ஆமாம். சர்வே எண்.145/1பி ல் 59 செண்ட் உள்ளது என்று எழுதியுள்ளோம். சர்வே எண்.145/1பி என்ற புலத்தின் விஸ்தீரணம் 0.59 செண்ட் பூமியானது 1948-ம் ஆண்டு முதலே பிரதிவாதிகளின் அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் தான் இருந்து வருகிறது என்றால் ? சரியல்ல. சர்வே எண்.145 என்ற புலத்தின் நடுமத்தியல் வரக்கூடிய ஓடைக்கும் கிழக்கிலும், சர்வே எண்.145 என்ற புலத்தில் கிழக்கு ஓரத்தில் வரக்கூடிய ஓடைக்கும் மேற்கிலும் உள்ள பகுதி சுமார் 77 ஆண்டுகாலமாக பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் ? இல்லை.

நாங்களும் தான் அனுபவித்து வருகிறோம். நான் அனுபவித்து வருவதற்கு எந்தவொரு ஆவணமும் எனது கையில் இல்லை என்றால் ? நாங்களும் தான் அனுபவித்து வருகிறோம். பட்டா, கிஸ்தி, எதுவும் எனது கையில் இல்லை என்றால் ? கிஸ்து பொதுவாக தான் கட்டியுள்ளோம். பட்டா இல்லை. 1948 பாகப்பிரிவினை ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள நான்கு குடும்பங்களும் தனித்தனியாக தான் வசித்து வருகிறார்கள் என்றால் ? ஆமாம். அப்போது இருந்தே உணவு மற்றும் குடும்ப அட்டைகள் தனித்தனியாக தான் இருந்தது என்றால் ? ஆமாம். வீடு தனியாக தான் கட்டி வசித்து வந்தார்கள் என்றால் ? சரிதான். சர்வே எண்.145 என்ற புலத்தை பொறுத்து பங்காளிகள் என்ற உறவை தவிர்த்து வேறு எந்தவொரு உறவும் இல்லை என்றால் ? நிலத்தை பிரிவினை செய்த பிறகு பங்காளிகள்

என்ற உறவை தவிர வேறு எந்த உறவும் இல்லை. அவரவர்கள் பாகசொத்தை அவரவர்கள் அனுபவித்து வருகிறோம் என்றால் ? ஆமாம். என்னை தவிர வேறு எந்த பங்காளிகளும் பிரிக்கப்பட்ட பாகத்தில் சொத்துக்கள் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ உள்ளது என்று எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றால் ? சரிதான்.

சர்வே எண்.145/1எ ல் எனக்கு பாத்தியப்பட்ட சொத்தில் நான் நிலங்களை விற்பனை செய்துள்ளேன் என்றால் ? சரிதான். நான் விற்பனை செய்தது போது சர்வே எண்.145/1எ மீதம் எவ்வளவு நிலத்தை வைத்துள்ளேன் என்றால் ? விஸ்தீரணம் 0.60 செண்ட் நிலத்தை விற்பனை செய்துள்ளேன். பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் கடை கட்டுவதற்கு முயற்சி மேற்கொண்டார் என்றால் ? இல்லை. சொத்தானது பழனி செல்லக் கூடிய மெயின் ரோட்டில் ரோட்டிற்கு தென்புறம் உள்ளது என்றால் ? சரிதான். எனது நிலத்தில் ஹோட்டல் நடத்துவதற்கு வாடகைக்கு விட்டுஇருந்தேன் என்றால் ? ஆமாம். என்னிடம் நிலம் கிரையம் பெற்றவர்கள் ஹோட்டல் வைத்துள்ளார்கள் என்றால் ? சரிதான். ஹோட்டல்களின் கழிவு நீர் தண்ணீரை மேல்புறமாக வரக்கூடிய ஓடையில் விட்டுவிடுகிறார்கள் என்றால் ? இல்லை.

தொடர்ச்சியான குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.07.17 17:57:06 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்